தமிழ்நாடு சட்டப் பேரவை.

வியாழக்கிழமை, 1971 ஜூலை 1.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர், திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. நீத்தார் நினைவுக் குறிப்பு.

சட்டப் பேரவை முன்னாள் உறுப்பினர் திரு. ஆர். ராஜகோபால சுவாமி நாயக்கர் அவர்கள் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உடுமலைப்பேட்டை தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு தமிழ் நாடு சட்டப் பேரவையில் 1962-ம் ஆண்டு முதல் 1967-ம் ஆண்டு வரை உறுப்பினராக இருந்த திரு. ஆர்.ராஜகோபாலசுவாமி நாயக்கர் அவர்கள் 29—6—1971 அன்று மறைந்ததைக்குறித்து இப்பேரவையின் இரங்கலையும் ஆழ்ந்த வருத்தத்தையும் அன்னாரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். மறைந்தவருக்கு மரியாதை அளிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து ஒரு நிமிடம் மௌனமாக நிற்கும்படி வேண்டிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து ஒரு நிமிடம் மௌனமாக நின்றனர்.

2. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 96, 97 ஆகிய எண்கள் உள்ள கேள்விகள் பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.

Wine factory for Dharmapuri district

98 Q.—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there is any proposal to start a wine factory in Dharmapuri district; and

(b) if so, when it will be started?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, in view of the fact that grapes are largely grown in Krishnagiri and Hosur taluks in the Dharmapuri district, may I request the Hon. Minister for

Industries to take this favourable factor into consideration and give preference to Dharmapuri district in the matter of starting a Wine Factory there?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அந்தத் தொழிற்சாலைக்கு அனுமதி கேட்டு பல பேர் மனுச் செய்திருக்கிறார்கள். அந்த மனுக்களின் மீது இறுதியான முடிவு செய்வதற்கு முன்னால் எந்த இடத்தில் வைக்கலாம் என்பது யோசிக்கப்படும்.

திரு. எம். சுரேந்திரன்: திராட்சையிலிருந்து ரசம் எடுத்து மது தயாரிப்பதற்குப் போதுமான திராட்சைகள் நம்முடைய மாநிலத்தில் பயிரிடப்படுகின்றனவா? நம் மாநிலத்தில் எவ்வளவு உற்பத்தியாகின்றது? அம்மாதிரியான தொழிற்சாலை ஏற்படுத்துவதற்கு வாய்ப்பு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ.மாதவன்: இப்படிப்பட்ட வாய்ப்பு இருப்பதாகத்தான் பல பேர் மனுச் செய்திருக்கிறார்கள். மதுரை மாவட்டத்தில் இருப்பதாகவும், தருமபுரி மாவட்டத்தில் இருப்பதாகவும் சொல்லியிருக்கிறார்கள். இதுபற்றி நாம் முடிவு செய்யும்பொழுது எந்த இடத்தில் என்பதைப் பரிசீலிக்கலாம்.

திரு. கே. டி. கே. தங்கமணி: மதுரை மாவட்டத்தில் திராட்சை அதிகமாக உற்பத்தி ஆகிறது என்றும், ஒரு ஒயின் பாக்டரியை ஆரம்பிக்க வேண்டும் என்றும் லைசன்ஸுக்காக கோரியிருக்கிறார்கள் என்று அறிகிறேன். அப்படியானால் அது சம்பந்தமாக நமது அரசு எப்போது முடிவு எடுக்கும்?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: ஏற்கனவே வெளிநாடுகளுக்கும். வெளிமாநிலங்களுக்கும் ஏற்றுமதி செய்வதற்காக தொழிற்சாலைகளை அனுமதிக்கிறோம், என்று ஒரு சட்டம் இயற்றப்பட்டது. இப்பொழுது நாம் மதுவிலக்கை எடுத்துவிட இருக்கிற காரணத்தினாலே இந்தப் புதிய சட்டம் வந்ததற்குப் பின்னால், புதிய சட்டத்தின் அடிப்படையில் இந்த அனுமதி வழங்கப்பட வேண்டும். அனுமதி வழங்கும்போது எந்த இடம் என்பதை முடிவு செய்யலாம்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: தமிழகத்தில் உற்பத்தி ஆகின்ற திராட்சையில் ஒரு பகுதி ஒயின் தயாரிப்பதற்குத் திருப்பி விடப்படும்போது அதனால் மக்கள் உட்கொள்ளுவதற்குக் கிடைக்கும் திராட்சையின் அளவு குறையாதவகையில் திராட்சை உற்பத்தியைப் பெருக்க அரசாங்கம் உறுதிசெய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இப்படித் தொழிற்சாலை வருகின்ற காரணத்தினாலேயே திராட்சை உற்பத்திப் பெருகும் என்றுதான் எதிர்பார்க்கிறோம்.